கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,

பெரியகுளம்.

<u>அசல் வழக்கு எண்.</u> 110/2025 நாள். 10.07.2026

<u>1 ஆம் பிரதிவாதி தரப்பு சாட்சி எண்.</u> 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவராமகிருஷ்ணன் | ஊர் | : | குச்சனூார் |
| தந்தை பெயர் | : | செல்வராஜ் | தாலுகா | : | உத்தமபாளையம் |
| தொழில் | : | பல் மருத்துவர் | வயது | : | 30/2026 |

ஆணையுறுதி சட்டப்படி சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். 1908 ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

<u>1 ஆம் பிரதிவாதி தரப்பில் 1 ம் சாட்சியின் முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கின் 1 ஆம் பிரதிவாதி தரப்பு 1 ஆம் சாட்சி ஆவேன். எனது தரப்பில் நிருபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நான் தாக்கல் செய்யும் நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் யாவும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானவைகள் ஆகும். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 19.12.2023 ஆம் தேதியிட்டு மதுரை கடன் வசூல் தீர்ப்பாயத்தில் சின்னமனூர் கனரா வங்கி கிளை முதுநிலை மேலாளர் தாக்கல் செய்த OA.No. 101/2024 மனுவின் ஜெராக்ஸ் நகல் பி.வா.சா.ஆ.7 (மேற்படி ஆவணம் வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் ஆட்சேபனையில் பேரில் குறியீடு செய்யப்படுகிறது)

2. 26.07.2024, 23.10.2024, 28.03.2025, 28.03.2025 ஆகிய தேதிகளிட்டு எனக்கு தேனி கனரா வங்கி recovery section–ல் இருந்து அனுப்பப்பட்ட கடிதங்கள் (offer letters) 4 எண்ணம் சார்பு செய்யப்பட்ட நகல்கள் பி.வா.சா.ஆ.8

3. 29.07.2024, 23.10.2025, 28.03.2025,24.08.2025 ஆகிய தேதிகளிட்டு நான் கடன் தொகையை அதன் வட்டி ரூபாய் 96 லட்சத்தை கனரா வங்கி சின்னமனூர் கிளையில் செலுத்தியதற்கான வங்கி சலான் 4 எண்ணம் ஜெராக்ஸ் நகல்கள் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.9

4. 21.07.2025 ஆம் தேதியிட்டு மதுரை கடன் வசூல் தீர்ப்பாயம் OA.No. 101/2024 ல் பிறப்பித்த உத்தரவின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.10

5. 24.07.2024 ஆம் தேதியிட்டு நான் வாதிக்கு எனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் அஞ்சலக ரசீதுடன் பி.வா.சா.ஆ.11

6. நான் எனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதில் அறிவிப்பினை வாதியின் வழக்கறிஞர் பெற்றுக்கொண்டதை காட்டக்கூடிய அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் பி.வா.சா.ஆ.12

வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டி பிரார்த்திக்கிறேன்.

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR

Digitally signed by SANKAR
Date: 2026.07.10 17:38:43 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.